# யூலை– 01 –முதல் சனி

### தூய யுனிப்பரோ சேரா

### “நீர் என் வீட்டிற்குள் அடியெடுத்து வைக்க நான் தகுதியற்றவன். ஆனால் ஒரு வார்த்தை மட்டும் சொல்லும்” (மத் 8:8)

## முதல் வாசகம்: தொடக்க நூல்18 : 1 – 15

பின்பு ஆண்டவர் மம்ரே என்ற இடத்தில் தேவதாரு மரங்களருகே ஆபிரகாமுக்குத் தோன்றினார். பகலில் வெப்பம் மிகுந்த நேரத்தில் ஆபிரகாம் தம் கூடார வாயிலில் அமர்ந்திருக்கையில்,கண்களை உயர்த்திப் பார்த்தார் மூன்று மனிதர் தம் அருகில் நிற்கக் கண்டார். அவர்களைக் கண்டவுடன் அவர்களைச் சந்திக்கக் கூடார வாயிலைவிட்டு ஓடினார். அவர்கள்முன் தரைமட்டும் தாழ்ந்து வணங்கி, அவர்களை நோக்கி,”என் தலைவரே, உம் கண்களில் எனக்கு அருள் கிடைத்தாயின், நீர் உம் அடியானை விட்டுக் கடந்து போகாதிருப்பீராக!இதோ விரைவில் கொஞ்சம் தண்ணீர் கொண்டுவரட்டும். உங்கள் கால்களைக் கழுவியபின், இம் மரத்தடியில் இளைப்பாறுங்கள்.கொஞ்சம் உணவு கொண்டுவருகிறேன். நீங்கள் புத்துணர்வு பெற்றபின், பயணத்தைத் தொடருங்கள். ஏனெனில் உங்கள் அடியானிடமே வந்திருக்கிறீர்கள்” என்றார். ”நீ சொன்னபடியே செய்” என்று அவர்கள் பதில் அளித்தார்கள்.அதைக் கேட்டு ஆபிரகாம் தம் கூடாரத்திற்கு விரைந்து சென்று, சாராவை நோக்கி, ”விரைவாக மூன்று மரக்கால் நல்ல மாவைப் பிசைந்து, அப்பங்கள் சுடு” என்றார்.ஆபிரகாம் மாட்டு மந்தைக்கு ஓடிச்சென்று, ஒரு நல்ல இளங்கன்றைக் கொணர்ந்து வேலைக்காரனிடம் கொடுக்க, அவன் அதனை விரைவில் சமைத்தான்.பிறகு அவர் வெண்ணெய், பால், சமைத்த இளங்கன்று ஆகியவற்றைக் கொண்டுவந்து அவர்கள் முன் வைத்தார். அவர்கள் உண்ணும்பொழுது அவர்களருகே மரத்தடியில் நின்றுகொண்டிருந்தார்.பின்பு அவர்கள் அவரை நோக்கி, ”உன் மனைவி சாரா எங்கே?” என்று கேட்க, அவர், ”அதோ கூடாரத்தில் இருக்கிறாள்” என்று பதில் கூறினார். அப்பொழுது ஆண்டவர் ”நான் இளவேனிற் காலத்தில் உறுதியாக மீண்டும் உன்னிடம் வருவேன. அப்பொழுது உன் மனைவி சாராவுக்கு ஒரு மகன் பிறந்திருப்பான்” என்றார். அவருக்குப் பின்புறத்தில் கூடார வாயிலில் சாரா இதைக் கேட்டுக் கொண்டிருந்தார்.ஆபிரகாமும் சாராவும் வயது முதிர்ந்தவர்களாய் இருந்தனர். சாராவுக்கு மாதவிடாய் நின்று போயிருந்தது.எனவே, சாரா தமக்குள் சிரித்து, ”நானோ கிழவி என் தலைவரோ வயது முதிர்ந்தவர். எனக்கா இன்பம்?” என்றாள்.அப்போது ஆண்டவர் ஆபிரகாமை நோக்கி, ”நான் வயது முதிர்ந்தவளாய் இருக்க, எனக்கு உண்மையில் பிள்ளை பிறக்குமா” என்று சொல்லி சாரா ஏன் இப்படிச் சிரித்தாள்? ஆண்டவரால் ஆகாதது எதுவும் உண்டோ!இளவேனிற்காலத்தில் குறிப்பிட்ட நேரத்தில் நான் உன்னிடம் மீண்டும் வருவேன். அப்பொழுது சாராவுக்கு ஒரு மகன் பிறந்திருப்பான்” என்று சொன்னார்.சாராவோ, ”நான் சிரிக்கவில்லை” என்று சொல்லி மறுத்தார். ஏனெனில் அச்சம் அவரை ஆட்கொண்டது. அதற்கு ஆண்டவர், ”இல்லை, நீ சிரித்தாய்” என்றார்.

**பதில்பாடல் :** ஆண்டவர் தம் இரக்கத்தை என்றும் நினைவில் கொள்வார்

## நற்செய்தி : மத்தேயு 8 : 5 -17

அக்காலத்தில், இயேசு கப்பர்நாகுமுக்குச் சென்றபோது நூற்றுவர் தலைவர் ஒருவர் அவரிடம் உதவி வேண்டி வந்தார்.”ஐயா, என் பையன் முடக்குவாதத்தால் மிகுந்த வேதனையுடன் படுத்துக் கிடக்கிறான்” என்றார்.இயேசு அவரிடம், ”நான் வந்து அவனைக் குணமாக்குவேன்” என்றார்.நூற்றுவர் தலைவர் மறுமொழியாக, ”ஐயா, நீர் என் வீட்டிற்குள் அடியெடுத்து வைக்க நான் தகுதியற்றவன். ஆனால் ஒரு வார்த்தை மட்டும் சொல்லும் என் பையன் நலமடைவான்.நான் அதிகாரத்துக்கு உட்பட்டவன். என் அதிகாரத்துக்கு உட்பட்ட படைவீரரும் உள்ளனர். நான் அவர்களுள் ஒருவரிடம் ”செல்க” என்றால் அவர் செல்கிறார். வேறு ஒருவரிடம்” வருக” என்றால் அவர் வருகிறார். என் பணியாளரைப் பார்த்து” இதைச் செய்க” என்றால் அவர் செய்கிறார்” என்றார். இதைக் கேட்டு இயேசு வியந்து, தம்மைப் பின்தொடர்ந்து வந்தவர்களை நோக்கி, ”உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன் இஸ்ரயேலர் யாரிடமும் இத்தகைய நம்பிக்கையை நான் கண்டதில்லை.கிழக்கிலும் மேற்கிலுமிருந்து பலர் வந்து, ஆபிரகாம்,ஈசாக்கு, யாக்கோப்பு ஆகியோருடன் விண்ணரசின் பந்தியில் அமர்வர்.அரசுக்கு உரியவர்களோ புறம்பாக உள்ள இருளில் தள்ளப்படுவார்கள். அங்கே அழுகையும் அங்கலாய்ப்பும் இருக்கும்” என்றார்.பின்னர் இயேசு நூற்றுவர் தலைவரை நோக்கி, ”நீர் போகலாம், நீர் நம்பியவண்ணமே உமக்கு நிகழும்” என்றார். அந்நேரமே பையன் குணமடைந்தான்.இயேசு பேதுருவின் வீட்டிற்குள் சென்றபோது, பேதுருவின் மாமியார் காய்ச்சலாய்ப் படுத்திருப்பதைக் கண்டார்.இயேசு அவரது கையைத் தொட்டதும் காய்ச்சல் அவரை விட்டு நீங்கிற்று. அவரும் எழுந்து இயேசுவுக்குப் பணிவிடை செய்தார்.பேய் பிடித்த பலரை மாலை வேளையில் இயேசுவிடம் கொண்டு வந்தனர். அவர் ஒரு வார்த்தை சொல்ல அசுத்த ஆவிகள் ஓடிப்போயின. மேலும் எல்லா நோயாளர்களையும் அவர் குணமாக்கினர்.இவ்வாறு, ”அவர் நம் பிணிகளைத் தாங்கிக்கொண்டார் நம் துன்பங்களைச் சுமந்துகொண்டார்” என்று இறைவாக்கினர் எசாயா உரைத்தது நிறைவேறியது.

**தியானம்:** நம்மை தாழ்த்துவது என்பது சில நேரங்களில் எமக்கு எளிதான காரியமாக இருப்பதில்லை. அதுவும் படித்து பட்டம் பெற்று நல்ல பதவியில் இருக்கும்போதும், தவறை மற்றவர்கள் சுட்டிக் காட்டும்பொழுதும், நம்மை தாழ்த்தி பணிந்து போக முடிவதில்லை. ஆனால் நற்செய்தியில் யேசுவை சந்திக்கும் அந்த தலைவனின் தாழ்ச்சி யேசுவையே வியப்படைய வைக்கிறது. நமக்கு காரியம் ஆக வேண்டும் என்றால் தாழ்ந்து போகும் நாம், மற்றவர்கள் எம்மிடம் எதிர்பார்ப்பதை செய்வதற்கு மனம் இல்லாமல் இருக்கின்றோமே. இதுவா கிறிஸ்த்தவ வாழ்வு?. மனைவி எப்போதுமே தாழ்ந்து போக வேண்டும் என்று கணவனும், பிள்ளைகள் தமக்கு தாழ்ந்திருக்கவேண்டும் என்று பெற்றோரும் நினைப்பது இயல்பு. ஆனால் அவர்களின் உணர்ச்சிகளிற்கு மரியாதை கொடுக்க எம்மால் தாழ்ந்து போக முடிகின்றதா? எமது விருப்பங்களையும், எண்ணங்களையும் அவர்கள் செய்ய வேண்டும் என்று நினைக்கும் நாம் அவர்களின் சின்ன சின்ன ஆசைகளைக்கூட குழி தோண்டி புதைக்கின்றோம் என்பதை மறந்து போகக் கூடாது. எனவே விட்டுக்கொடுப்பும், தாழ்ச்சியும் எமக்கு மிக மிக அவசியம். எனவே இதற்காக நாம் மன்றாடுவோம். முதிர் வயதில் சாராவிற்கு குழந்தை கொடுத்த இறைவனால் ஆகாத காரியம் எதுவும் இல்லை.